# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி | பொருளியல் | மதிப்பெண்கள்: 50

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-** 10×1=10

1) விவசாய உற்பத்தி அங்காடிக் குழு ______ ஆகும்
   அ) ஆலோசனைக்குழு ஆ) சட்டப்பூர்வமானக் குழு
   இ) அ மற்றும் ஆ ஈ) எதுவுமில்லை

2) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி சட்டம் ______ அம்லபடுத்தப்பட்டது
   அ) 2017 ஜுலை 1ம் தேதி ஆ) 2016 ஜுலை 1ம் தேதி
   இ) 2017 ஜனவரி 1ம் தேதி ஈ) 2016 ஜனவரி 1ம் தேதி

3) வெளிநாடு முதலீடு ______ உள்ளடக்கியது
   அ) FDI மட்டும் ஆ) FPI இ) FDI மற்றும் FPI ஈ) FDI மற்றும் FFI

4) இரண்டு முற்றிலும் வேறுபட்ட தன்மைகளை தொடர்புபடுத்தி குறிப்பது
   அ) நுட்பம் ஆ) சார்ந்திருப்பு இ) இரட்டைதன்மை ஈ) சமமின்மை

5) ஊரகபகுதியில் ஒரு மனிதன் எடுத்துக் கொள்ள வேண்டிய கலோரி அளவு?
   அ) 2100 ஆ) 2200 இ) 2300 ஈ) 2400

6) "இந்தியா விவசாயி கடனாளியா பிறந்து, கடனாளியா வாழ்ந்து, கடனாளியா இறந்து கடனை சந்ததிக்கு விட்டுச் செல்கிறான்" இச்சொற்றொடரைக் கூறியவர் யார்?
   அ) ஆடம் ஸ்மித் ஆ) காந்தி
   இ) அமர்தியா சென் ஈ) சர் மால்கம் டார்லிங்

7) எது ஊரக பகுதியின் அடிப்படை அலகாகக் கருதப்படுவது ______
   அ) பஞ்சாயத்து ஆ) வருவாய் கிராமம் இ) நகரம் ஈ) நகராட்சி

8) தமிழ்நாடு எதில் வளமானது?
   அ) வனவளம் ஆ) மனிதவளம்
   இ) கனிமவளம் ஈ) மேற்கூறிய அனைத்தும்

9) எந்தயூனியன் பிரதேசத்தில் பாலின விகிதம் அதிகமாகவுள்ளது?
   அ) சண்டிகர் ஆ) பாண்டிச்சேரி
   இ) இலட்சத்தீவு ஈ) அந்தமான் நிக்கோபார் தீவுகள்

10) SPIC அமைந்துள்ள இடம் ______
   அ) சென்னை ஆ) மதுரை இ) தூத்துக்குடி ஈ) புதுக்கோட்டை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - ஆ

**II.** பின்வரும் வினாவிற்கு ஏதேனும் ஐந்து வினாவிற்கு மட்டும் விடையளி. வினா எண். 17க்கு கட்டாயம் பதில் அளிக்கவும்:- 5×2=10

11) தனியார் மயமாக்கல் என்றால் என்ன?

12) சிறப்பு பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் என்ன?

13) குடிசைத் தொழில் வரையறு

14) ஊரக வளர்ச்சி என்றால் என்ன?

15) ஊரக மின்மயமாக்கல் வரையறு?

16) மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வரையறு.

17) தமிழ்நாட்டின் முக்கிய துறைமுகங்கள் யாவை?

## பகுதி - இ

**III.** பின்வரும் வினாவிற்கு ஏதேனும் ஐந்து வினாவிற்கு மட்டும் விடையளி. வினா எண். 24க்கு கட்டாயம் பதில் அளிக்கவும்:- 5×3=15

18) குளிர்பதனக் கிடங்கு பற்றி எழுதுக.

19) GST என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக?

20) மண்டல ஊரக வங்கி பற்றி குறிப்பு வரைக.

21) ஊரக மேம்பாட்டின் முக்கியத்துவம் கூறுக.

22) தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி?

23) தமிழ்நாட்டின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?

24) SHG யின் பண்புகளைக் கூறுக.

## பகுதி - ஈ

**IV.** அனைத்துக்கும் விடையளி:- 3×5=15

25) அ) சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும், பண்புகளையும் விளக்குக? (அல்லது)

ஆ) ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை விவாதி.

26) அ) ஊரக கடன்களுக்கான காரணங்களை ஆராய்க. (அல்லது)

ஆ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.

27) அ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி? (அல்லது)

ஆ) 2015-2020ம் ஆண்டிற்கான ஏற்றுமதி - இறக்குமதி கொள்கையின் சிறப்பில்புகளை விளக்குக.

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com